**மொரவெவ பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 09 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 19 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து மொரவெவ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆண்டின் போது நிலையான வைப்புக்கள் முதிர்வடைந்ததன் மூலம் கிடைத்திருந்த பணம் நிலையான வைப்புக் கணக்கிற்கு செலவு வைத்து வட்டியை வருமானத்திற்கு சீராக்கல் செய்திருக்கவில்லை. இதன் காரமணாக நிலையான வைப்புக் கணக்கு மீதி ரூபா 195,838 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) பதவியணி கடன் பதிவேட்டின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,178,932 தொகையான பதவியணிக் கடன் மீதி ரூபா 973,336 தொகையொன நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் பதவியணிக் கடன் ரூபா 205,596 தொகை குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) வைப்புப் பேரேட்டின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு மீதி ரூபா 1,350,734 தொகை எனினும், ரூபா 1,272,837 தொகை என நிதிக்கூற்றுக்களில் சாட்டப்பட்டிருந்தமையால் திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்கள் ரூபா 77,897 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடனுக்காக செலுத்த வேண்டிய வட்டித்தொகை ரூபா 551,917 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) 2014 ஆண்டிற்கான 2015 ஆண்டின் போது செலுத்தப்பட்ட கடன் வட்டி ஆகிய ரூபா 773,575 தொகையினை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்படாமல் கடன் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளமையால் திரண்ட நிதியம் அதே தொயைால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 8,772,379 தொகை எனினும் அதனை நிதிக்கூற்றுக்களில் ரூபா 8,105,199 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 667,180 தொகையால் கடன் மீதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 தொங்கல் கணக்குகள்**

2011 ஆண்டு முதல் காணப்பட்ட ரூபா 7,864,759 இற்கான தொங்கல் கணக்களில் மீதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஐந்தொகையில் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கு எதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி | முன்வைக்கப்படாத சாட்சி |
|---|---|---|
| பெற வேண்டிய கணக்குகள் | 950,536 | மீதியை உறுதிப்படுத்திய கடிதம், காலப் பகுப்பாய்வு அறிக்கை |
| செலுத்த வேண்டிய கணக்குகள் | 214,316 | |
| வாகன வருமானம் | 123,950 | வருமானம் சேகரித்தல் பட்டோலை |

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி, மாகாண சபை மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சின் செயலாளரின் 1990 அக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | 06 மாதங்களுக்கு ஒரு முறை வாகனங்களின் எரிபொருள் எரிவு பற்றி பரிசோதனை செய்யப்பட வேண்டும். எனினும் சபைக்குச் சொந்தமான 10 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/22 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | நிலுவை வருமானம் தொடர்பாக காலப்பகுப்பாய்வு ஒன்று தயாரித்திருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 3,612,963 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,255,867 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 15,868,830 இற்கான பிரதிகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| குத்தகை | 148 | 43 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,870 | 27 | 334 |
| ஏனைய வருமானங்கள் | 248 | 257 | 45 |

### 2.2.2 முத்திரைக் கட்டணம்

கிழக்கு மாகாண சபை பிரதான செயலாளரிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக கிடைக்க வேண்டிய தொகையினை இனங்காணப்பதற்கு மற்றும் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப் பணம்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாகக் கிடைக்க வேண்டிய தொகையினை இனங்காண்பதற்கு மற்றும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் அழிக்கப்பட வேண்டிய, பழுதுபார்க்க வேண்டிய மற்றும் விற்பனை செய்ய வேண்டிய பண்டங்கள் தொடர்பாக விதப்புரைகளை 2016 ஜூன் 14 ஆம் திகதி வரை அமுல் நடத்தியிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களின் பராமரிப்பு அலகுகளுக்காக தேவையான அடிப்படை இயந்திர உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் போக்குவரத்து வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் சபைக்கு வழங்கியிருந்த 07 வாகனங்களின் உரிமையினை சபையின் பேரில் மாற்றிக்கொள்வதற்காக 2016 ஆகஸ்ட் 03 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) JCB இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அவிருத்தி நிதியத்திலிருந்து 60 மாதாந்த தவணைகளில் செலுத்தி முடிப்பதற்கு 2013 மே மாததத்தில் பெற்றிருந்த ரூபா 9,520,000 இற்கான கடன் தொகைக்காக 2015 ஜூலை 30 திகதி வரை செலுத்த வேண்டிய வட்டித்தொகை ரூபா 3,952,391 இனை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) சபையின் 6 வாகனங்களுக்கு நடைமுறையாண்டின் போது சபையினால் வருமான அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது JCB இயந்திரம் தொடர்பாக கணக்கீடு செய்யப்பட்ட எரிபொருள் 7721 லீட்டர்களாகக் காணப்பட்டதுடன், நாளாந்த ஓட்ட அட்டவணையின் பிரகாரம் பயன்படுத்திய எரிபொருள் 7012 லீற்றர்களாகும். ரூபா 67,355 பெறுமதியினை 709 லீற்றர் எரிபொருளுக்கான வித்தியாசமொன்று காணப்பட்டது.

(ஊ) 1980 இன் 56 ஆம் இலக்கம் மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் 23(அ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 22 அரிசி ஆலைகள், தச்சு வேலைத்தளங்கள் மற்றும் கராஜ்களுக்கான அவ் அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமல் வர்த்தகத்தின் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிருவாகம்

#### 3.2.1 எதாபெந்திவெவ பிரதான பாதையை நிர்மாணித்தல்

இந்தப் பாதையின் 2 கி.மீ. தூரத்திற்கு கற்கள் பரப்பி தார் போடுவதற்காக 2012 பெப்ரவரி 21 மற்றும் 2012 மே 31 திகதிகளில் ரூபா 12,946,956 தொகை மற்றும் ரூபா 18,046,600 இற்கான பெறுமதிகளுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உடன்படிக்கையின் பிரகாரம் இந்த பாதை இரண்டு கட்டங்களாக பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்திருந்த போதிலும், நிர்மாண வேலைகளின் செயலாற்றுகை திருப்பதிகரமான மட்டத்தில் காணப்படாமையால் இரண்டு ஒப்பந்த வேலைகளும் இடைநிறுத்தப்பட்டு வேறு ஒப்பந்தக்காரர் ஒருவருடன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது. பெறுகைகள் செயற்பாடுகளில் ஒப்பந்தக்காரர் மதிப்பீடு செய்து மிகவும் பொருத்தமான ஒப்பந்தக்காரரை தெரிவு செய்யப்பட்டிருக்காமையால் ரூபா 12,317,552 தொகை ஒன்றினை மேலதிகமாக செலுத்துவதற்கும் குறிப்பிட்ட காலத்தில் நிர்மாண வேலை முழுவதையும் பூர்த்தி செய்வதற்கும் முடியாதிருந்தது.

(ஆ) ஆரம்ப ஒப்பந்தக்காரர் ஒப்பந்த வேலையை கைவிட்டிருந்த போதிலும் இந்த ஒப்பந்தக்காரரை ஒப்பந்தம் வழங்கப்படக் கூடாது என்று பட்டியல் பதிவதற்குத் தேவையான செயற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2005 இன் 03 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் III ஆம் பிரிவின் பிரகாரம் (2007 இன் 13 ஆம் இலக்கம் மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்க நிதிச் திருத்தச் சட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு கீழ்) ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தியிருந்த ரூபா 43,311,088 தொகை பெறுமதிக்கான தொழில் சான்றிதழ் நிதிய சரி (CIGFL) ஆகிய ரூபா 108,278 தொகையினை தடுத்து வைத்து உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 3.2.2 ரொடவெவ நூலகக் கட்டிடத்தினை பழுதுபார்த்தல் வேலை

பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரொடவெவ நூலகக் கட்டிடத்தின் திருத்த வேலைக்காக ரூபா 303,572 இற்கான தொகையொன்று 2015 திசெம்பர் 23 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பழுதுபார்த்து 2015 ஆகஸ்ட் 05 ஆம் திகதி சபைக்கு ஒப்படைத்திருந்த போதிலும் நூலகத்தில் வேலைகளை ஆரம்பிப்பதற்கு மற்றும் மின்சார வசதி பெற்றுக்கொள்வதற்காக 2016 ஜூன் 05 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி**

2015 திசெம்பர் 31 திகதியில் சபையில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிடப் பதவியணி |
|---|---|---|---|
| நிறைவேற்று நிலை | 01 | - | 01 |
| இரண்டாம் நிலை | 14 | 06 | 08 |
| மூன்றாம் நிலை | 16 | 14 | 02 |
| மொத்தம் | 31 | 20 | 11 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஏப்ரல் மாதம் முதல் பதில் கடமை அடிப்படையில் செயலாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், இது வரை அவர் சபையில் கடமையாற்றுகிறார்.

(ஆ) 4 ஊழியர்கள் மாத்திரம் அலுவலகத்தில் ஆவணங்களை பேணப்படுவதினால் ஆவணங்கள் முறைசார் விதமாகக் பேணப்பட்டிருக்காததுடன், அவை கணக்காய்வின் போது பிரச்சினையாகக் காணப்பட்டது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | கவனம் செலுத்த வேண்டிய பரப்புகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) கணக்குப் பதிவு<br>(ii) துணைப் பதிவேடு பேணல் |
| (ஆ) | வருமான நிருவாகம் | (i) நிலுவை வருமானம் அறவீடு செய்தல்<br>(ii) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் பெறல். |
| (இ) | ஒப்பந்த நிருவாகம் | (i) உடன்படிக்கை காலத்தில் ஒப்பந்த வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.<br>(ii) கைத்தொழில் சான்றிதழ் நிதிய வரி செலுத்துதல் |
| (ஈ) | மனித வள முகாமைத்துவம் | (i) ஊழியர் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.<br>(ii) வேலை பகிர்வு முறைசார் விதமான மேற்கொள்ளல் |